| அ.வ.எண். | 295/2010 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | கௌரி | நாள் | 14.09.2021 |
| கணவர் பெயர் | சீனிவாசன் | | |

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னுடைய தகப்பனாருடன் பிறந்த பெண்மக்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர். என்னுடைய தகப்பனாருடன் பிறந்த பெண்மக்கள் 4 பேர் என்றால் எனக்கு 3 பேர் தான் தெரியும். பொன்னுதாயி, பழனியம்மாள் மற்றொருவர் பெயர் தெரியாது. ஏனென்றால் என்னுடைய பெற்றோர்களுடன் பேச்சுவார்த்தை இல்லை. என்னுடைய தாத்தா 1994–ல் இறந்தார். 11.09.1994 ல் இறந்தார் என்றால் ஆமாம். என்னுடைய சகோதரர் கந்தசாமி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் நன்றாக தான் உள்ளார். அவர் என்னுடைய தாயாரின் பாதுகாப்பில் உள்ளார் என்றால் அவருடன் தான் இருந்து வருகிறார். என்னுடைய தாத்தா இறப்பதற்கு முன்பு 06.07.1994–ல் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் இல்லை. 2002–ல் என்னுடைய சித்தப்பா சித்துராஜ் அவருடைய சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்றால் இல்லை. நான் சித்துராஜ் சில சொத்துக்களை விற்பனை செய்துவிட்டதாகவும், அந்த சொத்துக்களை வாங்கிய நபர்களை சேர்க்கவேண்டும் என மனு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. என்னுடைய சகோதரர் மோகன்ராஜ் பாண்டியன் வளவில் குடி இல்லை என்றால் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் அவர் எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. வழக்கு அறிவிப்பு பாண்டியன் வளவிற்கு தான் அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். ராஜகோபால் செட்டியார் தெருவில் தான் மோகன்ராஜ் குடியிருந்தார் என்றால் இல்லை. சொந்த வீட்டில் தான் உள்ளார். ஆனால் வாங்காமல் திருப்பி அனுப்பிவிட்டார். கடந்த 31.01.2012 ல் ராஜகோபால் செட்டியார் தெருவில் தான் மோகன்ராஜ் உள்ளார் என முகவரி மாற்றம் செய்துள்ளேன் என்றால் இல்லை. பொய்யான முகவரிக்கு அறிவிப்பு அனுப்பிவிட்டு அவர் அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டார் என கூறியுள்ளோம் என்றால் உண்மையான முகவரிக்கு தான் அறிவிப்பு அனுப்பினோம். என்னுடைய தாத்தா என்னுடைய சகோதரர்களுக்கும், சித்தப்பாவிற்கும் சேர்த்து 06.07.1994 ல் உயில் எழுதிவைத்தார் எனவும், அதன்பின்னர் 11.09.1994 ல் இறந்துவிட்டார் என்றால் இல்லை. எங்கள் அனைவரின் கூட்டுசுவாதீனத்தில் தான்

உள்ளது. அந்த உயிலின்படிக்கு ஏ அட்டவணை சொத்தான 1ஏக்கர் 43 சென்டை என்னுடைய சகோதரர்கள் அனுபவித்து வருகின்றனர் என்றால் இல்லை. கூட்டாக தான் அனுபவித்து வருகின்றோம். என்னுடைய சித்தப்பாவிற்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது எனவும், அதனை அவர் 2002ல் மனை இடங்களாக பிரித்து விற்பனை செய்துவிட்டார் என்றால் இல்லை. கூட்டுப்பட்டாவாக தான் உள்ளது. என்னுடைய திருமணத்திற்காக ஒருபகுதி சொத்தை விற்பனை செய்து தகுந்த முறையில் சீர்வரிசை செய்து திருமணம் செய்து கொடுத்தும், தற்போதுவரை அனைத்து சீர்களையும் செய்து வருகின்றனர் என்றால் இல்லை. என்னை டீக்கடைக்காரருக்கு தான் திருமணம் செய்து கொடுத்தனர். அப்போது தான் கேள்வி கேட்கமாட்டார்கள் என்பதற்காக திருமணம் செய்து கொடுத்தார்கள். எந்த சீர்வரிசையும் செய்யவில்லை. திருமணத்திற்கு முன்பே வழக்கு சொத்தில் உரிமை ஏதும் இல்லை என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்ய வழக்கு மூலமே எழவில்லை என்றால் சரியல்ல. அறிவிப்பு தவிர வேறு வகையில் என்னுடைய சகோதரர்களிடம் பாகம் கேட்கவில்லை என்றால் அதற்கு முன்பே பாகம் கேட்டேன். ஆனால் கொடுக்கமாட்டேன் என கூறியதால் வழக்கு தாக்கல் செய்தேன். என்னுடைய தாத்தா உயில் எழுதியது எனக்கு தெரியும் எனவும், அதனால் தான் பாகம் கேட்கவில்லை எனவும், தற்போது வழக்கு சொத்து உள்ள இடத்தில் மனை இடங்கள் அதிக விலைக்கு செல்வதால் அதன்மூலம் பணம் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்திற்கு தனிப்பட்ட மதிப்பு உள்ளது எனவும், ஆனால் தவறாக மதிப்பை குறிப்பிட்டுள்ளேன் என்றால் பத்திர அலுவலகத்தில் என்ன தொகை என பார்த்து தான் கட்டணம் செலுத்தியுள்ளேன். வழக்கு சொத்திற்கு என்னுடைய சகோதரர்களுக்கும், சித்தப்பாவிற்கும் முழுஉரிமை உள்ளதால் அவர்கள் விற்பனை செய்தவதற்கு முழுஉரிமை உள்ளது எனவும், ஆகவே நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கிற்கு முகாந்திரமும், வழக்குமூலமும் இல்லை என்பதால் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.